கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30


# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 - ஒலி 51 | 18-12-2022



## எவரெஸ்ட் மீது டென்சிங் மக்கள் மனங்களின் உச்சியில் ஹில்லாரி

**Tenzing (Hillary) on top of the Everest**



# அன்பின் சிகரத்தில் ஹலாரி



அருட்பணி. சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே வணக்கம். நமது இணைய இதழின் வழியாக நாம் கொண்டிருக்கும் இந்த ஞான உறவுக்கு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். காரணம் இது சாதாரண உறவல்ல, இது உருவமற்ற ஞான நிலையாகும். வெகு தொலைவில் நாம் வேறு வேறு திசையில் இயங்கிக் கொண்டிருந்தாலும், நமது எண்ணங்களின் வழியாக நாம் ஒன்றிணைந்திருக்கின்றோம். ஒவ்வொரு வாரமும் நாம் ஒருவரையொருவர் சந்திப்பது எதிர்பார்ப்பு நிறைந்த ஒரு அனுபவம். உங்களுக்கு வழங்குவதற்காக நான் எடுக்கும் தேடல் முயற்சியும், இந்த வாரம் என்ன வாசிப்போம் அது எப்படி இருக்கும் என்ற உங்களின் எதிர்பார்ப்பும் தருகின்ற அந்த காத்திருப்பும் நாம் அறியா நம்மை இணைக்கின்ற அந்த பிரபஞ்ச பசை நம்மை இன்னும் நன்றாக உழைக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்றது. நீங்கள் இல்லை என்றால் நாங்கள் இல்லை. உங்களுக்காக இன்னும உண்மையாகவும், உற்சாகத்தோடும் உழைக்க எங்களுக்காகத் தினமும் செபிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருக்க வேண்டும். அத்தகைய பண்பே நம்மை இணைத்திருக்கின்ற கடவுள் துகளாகும்.

இந்த பிரபஞ்சம் உருவானது இத்தகைய பிணைக்கும் சக்தியால்தான். பிரபஞ்சத்தின் பெருவெடிப்பிற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சிதறிப்போன பருப்பொருட்களை ஒன்றிணைத்து கோள்களாகவும், நட்சத்திரங்களாகவும் ஒருங்கமையக் காரணமாக இருந்ததைத் தான் நவீன விஞ்ஞானம் கடவுள் துகள் என்று பெயரிட்டு அழைக்கின்றது.

அதுபோல, உயிருள்ள அனைத்தையும் ஒன்றிணைப்பது நம் கண்ணுக்குத் தெரியாத அந்த சக்திக்குப் பெயர்தான் அன்பு. அது சகமனிதனோடு நாம் இணைந்து வாழ உதவும் அன்பைத்தான் பிறரன்பு என்று அழைக்கின்றோம். சுய அன்பு, கிளை பரப்பி எல்லாவற்றோடும் பிண்ணிப் பிணையும்போது பிறரன்பு என்ற பேரன்பாக விஸ்வரூபம் எடுக்கின்றது. அதையும் கடவுள் துகள் என்றும், அல்லது கடவுள் உணர்வு அல்லது இறைப் பண்பு என்றும் அழைக்கலாம்.

மனிதன் இறைவனின் சாயலிலே படைக்கப்பட்டதால், அந்த இறைப் பண்பு நமக்குள்ளும் நிறைந்திருக்கின்றது. அது சுய அன்பல்ல, மாறாக பிறரன்புதான். பிறரை அன்பு செய்வதன் மூலமாகத்தான் நாம் நலமாக வாழ முடியும்.

பிறரை வாழ வைக்கின்றபோது நமக்குள் ஏற்படும் மனநிறைவுக்கும், மன மகிழ்ச்சிக்கும் ஈடு இணை இல்லவே இல்லை.

தன்னலம் ஒரு குறிப்பிட்ட காலம்வரைதான் சந்தோஷத்தைத் தரும். அதன் பிறகு, தனிமை, விரக்தி, ஏமாற்றம், மனஅழுத்தம்தான் மிஞ்சும்.

ஆகவேதான் இயேசு பெருமான்....எல்லா கட்டளைக்கும் மேலாக ஒரே ஒரு கட்டளையைக் கொடுத்தார். அது பொன் விதி என்று அழைக்கப்படுகின்றது.


இத்தருணத்தில் இயேசுவின் வாய்மொழியாகக் கூறியவற்றை இங்கு படிப்போம்.....

31 பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

32 உங்களிடம் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே.

33 உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே.

34 திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? ஏனெனில், முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நோக்குடன் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே.


ஹில்லாரி

35 நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள்; அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் கடன் கொடுங்கள். அப்போது உங்கள் கைம்மாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றி கெட்டோருக்கும் பொல்லாதோருக்கும் நன்மை செய்கிறார்.


டென்சிங்

36 உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்...

38 கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். (லூக்கா 6:31–36)

திருவிவிலியம் முழுவதையும் நாம் மனப்பாடமாகத் தெரிந்திருந்தாலும், அவற்றை நாம் கடைப்பிடித்து வாழும்போதுதான் அவை உயிருள்ள வார்த்தையாக மாறும், பலன் கொடுக்கும்... அதை உணர்ந்து வாழ்ந்த ஒருவரின் அனுபவத்தை உங்களோடு இப்போது பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

உலகின் மிக உயர்ந்த மலைச் சிகரம் எவரெஸ்ட் என்று நாம் அறிவோம். அதன்மீது முதன் முதலாக ஏறியவர்கள், சர் எட்மண்ட் பெர்சிவல் ஹில்லாரி, மற்றும் ஷெர்பா டென்சிங் நார்கே என்பர்களாவர் என்பதும் நமக்கு நன்கு தெரியும். ஹில்லாரி அவர்கள் நியூலாந்தைச் சேர்ந்தவர். அவர் இந்தியா, நேபாளத்திற்கான ஹெ கமிஷனர் (உயர் ஆணையர்).

டென்சிங் நார்கே அவர்கள் நேபாளத்தைச் சேர்ந்த மலையேறும் வீரர். அவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒன்பதாவது மலையேறும் குழுவோடுதான் எவரெஸ்டி சிகரத்தை நோக்கிப் பயணித்தார்கள்.

1953ம் வருடம் மே மாதம் 29ம் தேதி ஹில்லாரியும், டென்சிங்கும் எவரெஸ்ட் சிகரத்தை முதலில் அடைந்தார்கள்.

முதலில் ஹல்லாரி அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறினார். அதன்பிறகு டென்சிங் அவர்கள் அச் சிகரத்தின் மீது ஏறினார். தங்களோடு எடுத்துச் சென்ற இங்கிலாந்து, இந்தியா, மற்றும் நோபாள தேசியக் கொடிகளை அங்கு அவர்கள் நட்டார்கள்.

அதன்பிறகு, டென்சிங் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறி நின்றதை ஹில்லாரி அவர்கள் புகைப்படம் எடுத்தார். அது உலகம் முழுவதும் பரவி அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது.

அந்தப் புகைப்படத்தில் நீங்கள் இல்லையே? என்று நிருபர்கள் ஹில்லாரியிடம் கேட்டபோது. எனக்குத் தெரிந்து, அதுவரை டென்சிங்

புகைப்படம் எடுத்ததேயில்லை. அந்த சமயத்தில் டென்சிங் அவர்களுக்கு எப்படி புகைப்படம் எடுப்பது என்று சொல்லித்தர அது சரியான தருணமில்ல என்று அடக்கத்துடன் சொன்னாராம்.

என்ன ஒரு பெருந்தன்மை. பிறரை உயர்வாகக் கருதி, அவர்களின் நலனையே மிக முக்கியமாகக் கருதி வாழ்பவர்களால்தான் அப்படிப்பட்ட அரிய தருணத்திலும் தன்னை மறைக்க முடியும். பிறரன்பும் தன்னடக்கமும் இணைந்தே இருக்கும்.

அதைத்தான் விவிலியம் வலியுறுத்திக் கூறுகின்றது. பிறரன்பே மீட்பு பெறுவதற்கான கடவுச் சீட்டு. புனித.பவுலடியார் பிலிப்பியருக்கு தான் எழுதியக் கடிதத்தில் இவ்வாறு கூறுகின்றார்.... (பிலிப்பியர் 1:2-5)

நீங்கள் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவராய்த் திகழ்ந்து, ஒரு மனத்தவராயிருந்து என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள்.

3 கட்சிமனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத் தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவராகக் கருதுங்கள்.

4 நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும்.

5 கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!



People who love each other fully and truly are the happiest people in the world. They may have little, they may have nothing, but they are happy people. Everything depends on how we **love one another**

\- St. Mother Teresa



# விவிலியம் அறிவோம் – 69



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## பத்துக்கட்டளைகள்

விப 20 முதல் 23 வரையுள் பிரிவுகள் உடன்படிக்கை விதிகள் என்றழைக்கப்படுகின்றன என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இந்த உடன்டிக்கை விதிகளில் முதன்மையானவையாக பத்துக்கட்டளைகள் வருகின்றன. கிரேக்க மொழியில் இவை பத்து வார்த்தைகள் *(Decalogue)* என அழைக்கப்படுகின்றன. பத்துக்கட்டளைகள் கடவுளின் விரலால் (விப 31:18) எழுதப்பட்டவை. உடன்படிக்கை விதிகளில் முதலாவதாக வருகின்ற பத்துக்கட்டளைகள் உடன்படிக்கை விதிகளின் சுருக்கமாக உள்ளது எனவும் கூறலாம். இந்தக் கட்டளைகள் அறநெறி வாழ்விற்கான அடிப்படைக் கோட்பாடுகளைத் தருகின்றன; மனிதர்கள் கடவுளின் பிள்ளைகளாக வாழ்வதற்கான வழிமுறைகளைக் காட்டுகின்றன. விவிலியத்தில் இரண்டு இடங்களில் பத்துக்கட்டளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை முறையே விப 20 மற்றும் இச 5 ஆகும். இரண்டு இடங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளில் சில வித்தியாசங்கள் உள்ளன. இந்த வித்தியாசங்கள் அவை வருகின்ற மரபுகளின் தாக்கத்தால் ஏற்பட்டவையாக இருக்கலாம். பத்துக்கட்டளைகள் கடவுளையும் பிறரையும் அன்பு செய்து வாழ்வதற்குத் தேவையான கண்ணோட்டங்களையும் நடைமுறைச் செயல்களையும் காட்டுகின்றன. முதல் மூன்று கட்டளைகளும் கடவுளுடன் இஸ்ரயேல் மக்களுடைய உறவையும், அந்த உறவிலே நிலைத்திருப்பதற்கான கடமைகளையும் கூறுகின்றன. இந்த உறவை தந்தை பிள்ளைகள் உறவுடன் ஒப்பிடலாம். யாவே கடவுள் தந்தையாகவும் இஸ்ரயேல் பிள்ளைகளாகவும் உருவகிக்கப்படுகின்றனர். கடவுள் இஸ்ரயேலின் தந்தையாக உருவகிக்கப்படுவதால் இஸ்ரயேல் மக்கள் சகோதர சகோதரிகளாகப் பார்க்கப்படுகின்றனர். எனவே அடுத்து வரும் ஏழு கட்டளைகளும் சகோதர சகோதரிகளோடு இஸ்ரயேல் மக்கள் கொண்டிருக்கவேண்டிய உறவுக்கான அடிப்படைத் தேவைகளை எடுத்துரைக்கின்றன.

பத்துக்கட்டளைகளுள் முதல் கட்டளை இஸ்ரயேல் மக்களுடன் கடவுளுக்கிருக்கும் உறவை வெளிப்படுத்தி, அவரை மட்டுமே கடவுளாக ஏற்று வழிபட அழைப்பு விடுக்கிறது. கடவுள் தந்தையாக இருப்பதால் தன் மக்களை அவர் வெகுவாக அன்பு செய்கிறார். அவரது அன்பின் வெளிப்பாடாகத்தான் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்டு வந்தார். கடவுள் ஒருவரே. அவர் எல்லாம் வல்லவராக, அனைவரையும் அன்பு செய்பவராக இருக்கின்றார். எனவே இஸ்ரயேல் யாவே கடவுளுக்கு மட்டுமே ஊழியம் புரியவேண்டும். வேறு எந்தக் கடவுள்களையும் வழிபடுவதை அவர்கள் தவிர்க்க வேண்டும். இரண்டாவது கட்டளை கடவுளின் பெயருக்கு மரியாதை தர அழைப்பு விடுக்கிறது. கடவுளின் பெயருக்கு மரியாதை தருவதென்பது பல வழிகளில் வெளிப்படுத்தப்படலாம். கடவுளைச் சபிப்பது, அவரது பெயரால் ஆணையிடுவது போன்றவைத் தவிர்க்கப்படவேண்டும். கடவுளின் பெயர் புனிதமானது. எபிரேய மரபில் கடவுளின் பெயர் உச்சரிக்கப்படுவதில்லை. எபிரேய விவிலியத்தில் கடவுளின் பெயர் வருகின்ற இடங்களிலெல்லாம் அதோனாய் என்ற சொல் பயன்படுத்தப்படும். இந்தப் பழக்கம் கடவுளின் பெயருக்குத் தருகின்ற மரியாதையின் வெளிப்பாடாகும். மூன்றாவது கட்டளை ஓய்வு நாளைக் கடைபிடிக்க அழைப்பு விடுக்கிறது. ஓய்வு நாள் கடவுளால் புனிதப்படுத்தப்பட்ட நாள்; கடவுளின் நாள். ஆறு நாள்களில் உலகைப் படைத்த கடவுள் ஏழாம் நாளில் ஓய்வெடுக்கின்றார். அந்த நாளைப் புனிதப்படுத்துகின்றார். கடவுள் ஏழாம் நாளில் ஓய்வெடுத்ததுபோல இஸ்ரயேல் மக்களும் ஓய்வெடுக்கவேண்டும். தொடக்கத் திருஅவையில்

வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாக, ஆண்டவருடைய நாளாகக் கொண்டாடினார்கள்.

நான்காவது கட்டளை பெற்றோரை மதித்து நடக்க அழைப்பு விடுக்கிறது. பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதால் பிள்ளைகளின் மேல் அதிகாரம் கொண்டவர்களாகப் பெற்றோர் இருக்கின்றனர். எனவே பிள்ளைகள் பெற்றோரை மதிக்கவேண்டும்; அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவர்கள் இறப்பதுவரை செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். இறந்த பின்னும் அவர்களின் நினைவைப் போற்றவேண்டும். பெற்றோர் பிள்ளைகள் உறவு புனிதமான உறவு. இந்த உறவைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஐந்தாவது கட்டளை ஒரு மனிதனின் வாழ்வுரிமையுடன் தொடர்புடையது. வாழ்வைப் பறிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. எனவே எந்த வடிவத்திலும் பிறரின் உயிரை எடுப்பதற்கு அனுமதியில்லை. கொலை செய்தல், கருக்கலைப்பு, கருணைக் கொலை மற்றும் தற்கொலை ஆகிய அனைத்தும் ஐந்தாவது கட்டளையின் கீழ் வருகின்றன. மனிதர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதும் கொலைதான். மலைப்பொழிவில் இயேசு சினம் கொள்வதே தவறு என்கிறார். ஏனெனில் சினம் கொலை செய்வதற்குக் தூண்டுதலைக் கொடுக்கலாம். ஆறாவது கட்டளை எல்லாவிதமான பாலியல் வன்கொடுமைகளையும் தடைசெய்கிறது. திருமணத்தின் புனிதத் தன்மையை இந்தக் கட்டளைப் பாதுகாக்கிறது. திருமணத்திற்கு வெளியே தவறான உறவுகளைக் கொண்டிருப்பதை தவிர்ப்பதற்கு அழைக்கிறது. திருமணத்திற்கு வெளியே பலவிதமான பாலியல் வன்கொடுமைகள் வழக்கத்தில் உள்ளன. கை மதுனம், பரத்தமை. விபசாரம், கற்பழிப்பு, இச்சை நிறைந்த பார்வை, ஆபாசப் படங்களைத் தயாரிப்பது, பார்ப்பது போன்ற அனைத்தும் ஆறாவது கட்டளையின் கீழ் வருகின்ற பாவங்கள்தான்.

ஏழாவது கட்டளை களவு செய்வதைத் தவிர்க்கக் கூறுகிறது. அடுத்தவருக்கு உரிமையானதை அபகரித்துக்கொள்வதுதான் களவு. இது பிறருடைய சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், தரம் குறைந்த பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்தல, ஒப்பந்தங்களை மீறுதல், வரி செலுத்துவதைத் தவிர்த்தல், போலி ஆவணங்களைத் தயாரித்தல், வருமானத்திற்கு அதிகமான செலவு செய்தல், மற்றும் ஏமாற்றுதல் ஆகிய அனைத்தும் களவின் வேறுபட்ட வடிவங்கள்தான். எட்டாவது கட்டளை நமது வார்த்தைகளிலும் செயல்களிலும் உண்மையுடனும் நேர்மையுடனும் வாழ அழைப்பு விடுக்கிறது. உண்மையைப் பேசுவதென்பது நாம் கண்டற்றையும் கேட்டவற்றையும் அப்படியே கூறுவதாகும். பொய்ச்சாட்சி பல வடிவங்களில் வெளிப்படுகிறது. பொய் சாட்சியம் கூறுவது, அவதூறுகளைப் பரப்புவது, அவசரத் தீர்ப்பு, சிறுமைப்படுத்துதல், முகஸ்துதி, புகழ்ச்சி, பெருமை பாராட்டுவது போன்ற அனைத்தும் இதில் உள்ளடங்கும். ஒன்பதாவது மற்றும் பத்தாவது கட்டளைகள் அடுத்தவருக்கு உரிமையான எதையும் கவர்ந்திட விரும்பாதே எனக் கூறுகிறது. அடுத்தவருக்கு உரிமையானவற்றில் ஆசைகொள்ளாமல் இருப்பதற்கு நினைவுகளில் தூய்மை வேண்டும்; ஆசையைத் துறக்க வேண்டும். இந்தக் கட்டளைகள் சுய கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றன.

பத்துக்கட்டளைகளுக்குப் பின்னால் யாவே கடவுள் இருக்கிறார். இஸ்ரயேல் மக்களின் நல்வாழ்விற்காக யாவே கடவுள் செயல்படுகிறார். இந்தப் பத்துக்கட்டளைகள் நானே உன் கடவுளாகிய ஆண்டவர் என்ற சொற்றொடருடன் தொடங்குகிறது. இதன் வழியாக விடுதலைப் பயண நிகழ்வுகளில் யாவே கடவுளின் முக்கியப் பங்கு வெளிப்படுத்தப்படுகிறது. இஸ்ரயேல் இந்தக் கட்டளைகளைக் கடைபிடிக்கவேண்டும். ஏனெனில் கடவுள் அவர்களின் வாழ்வில் தலையிட்டு அவர்களின் வாழ்வு சிறப்பதற்காக இந்தக் கட்டளைகளைக் கொடுக்கிறார். விடுதலைப் பயணம் நூலில் நாம் வாசிக்கும் பத்துக்கட்டளைகளுக்கு ஒரு வரலாறு உள்ளதுபோல் தெரிகிறது. இதை இணைச்சட்டம் 5:1-21 வரை நாம் வாசிக்கும் பத்துக்கட்டளைகளின் மூலமாக அறிந்துகொள்ளலாம். விப 20 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளுக்கும் இச 5 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக்கட்டளைகளுக்கும் சில வித்தியாசங்கள் உள்ளன. அறிஞர்களின் கருத்துப்படி இச 5 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்துக் கட்டளைகள் காலத்தால் முந்தியவை. பத்துக்கட்டளைகளுக்கும் பண்டைய மேற்காசிய நாடுகளின் சட்டங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்தத் தொடபுகளை மேற்காசிய நாடுகளில் பல இடங்களில்


நடத்தப்பட்ட அகழ்வாரய்ச்சி முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

கி.பி. 1902 ஆம் ஆண்டு அகழ்வாராயச்சி நிபுணர்கள் மெசப்பெட்டோமியாவில் ஆட்சி செய்தி அரசன் கமுராபியின் சட்டத் தொகுப்பைக் கண்டெடுத்தனர். அதன்பின் சுமேரியர், அசீரியர் மற்றும் இத்தியர்களின் சட்டத்தொகுப்புகள் கண்டெடுக்கப்பட்டன. இந்தச் சட்டத் தொகுப்பகள் அனைத்துமே மோசேயின் சட்டத் தொகுப்புகளுக்கு முந்தையவை. மேலும் இறுதியாக கண்டெடுக்கப்பட்ட பாபிலோனியரின் சட்டத் தொகுப்புகள், கானானியரின் ஒப்பந்தப் பத்திரங்கள், மற்றும் எகிப்து நாட்டின் அரசப்பிரகடனங்கள் அனைத்தும் பண்டைய மேற்காசிய நாடுகளில் பயன்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன. இவைகளோடு பழைய ஏற்பாட்டில் காணப்படும் சட்டங்களை ஒப்பிடும்போது பண்டைய மேற்காசிய நாடுகளில் இத்தகையச் சட்டங்கள் பண்டைய காலத்திலேயே வழக்கத்தில் இருந்திருக்கின்றன என்பது தெரியவருகிறது. ஆனால் பழைய ஏற்பாட்டுச் சட்டத்தொகுப்பிற்கும் அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட சட்டத்தொகுப்புகளுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஏனைய சட்டத் தொகுப்புகள் மாறுபட்ட சட்டங்களை நீதியரசர்களுக்குப் பயன்படும் விதத்தில் உருவாக்கப்பட்டத் தொகுப்புகள். இந்தத் தொகுப்புகளில் வருகின்ற அனைத்துச் சட்டங்களும் நேர்மறையாக எழுதப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாட்டு நூல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள சட்டங்கள், குறிப்பாக பத்துக்கட்டளைகள் நேர்மறையாக எழுதப்படவில்லை. மாறாக பல கட்டளைகள் எதிர்மறையாகவும், சுருக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாக, பத்துக்கட்டளைகளில் ஐந்தாவது கட்டளையிலிருந்து ஒன்பதாவது கட்டளை வரை வருகின்ற கட்டளைகள் மிகவும் சுருக்கமாக உள்ளன. இப்படி சுருக்கமாக, படிப்பவர்கள் மனதில் பதியும் விதத்தில் எழுதப்படுகின்ற பழக்கம் இஸ்ரயேலில் ஒரு மரபாக இருந்து வந்துள்ளதை விப 34:28; மற்றும் இச 5:22 போன்ற பாடங்களிலிருந்து அறிந்து கொள்கிறோம். இஸ்ரயேலைச் சுற்றி வாழ்ந்த மக்களிடையே இவ்வாறு எழுதுகின்ற பழக்கம் இல்லை. எனவே இந்தப் பழக்கம் இஸ்ரயேல் மக்களின் ஒரு தனித்துவம் எனவும் கூறலாம். பண்டைய காலத்தில் உடன்படிக்கை விதிகளும், அரசப்பிரகடனங்களும் எதிர்மறையாகக் கூறப்பட்டன. எனவே பத்துக்கட்டளைகள் ஒரு அரசப்பிரகடனமாகவும் உள்ளது எனக் கூறலாம். யாவே மதமும் உடன்படிக்கையும் பண்டைய காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு கொண்டவையாக உள்ளன என்பதைக் காட்டும் ஒரு கண்ணாடியாகவும் இந்தச் சட்டங்கள் உள்ளன. மோசேயின் காலத்திலிருந்தே இந்தத் தொடர்பு இருக்கலாம்.

பயணம் தொடரும்...





# ஞாயிறு மறையுரை

## திருவருகைக் காலம் 4-ம் வாரம்

18-12-2022

முதல் வாசகம் - எசாயா 7:10-14
இரண்டாம் வாசகம் - உரோமையர் 1:1-7
நற்செய்தி வாசகம் - மத்தேயு 1:18-24


மறையுரை வழங்குபவர்

அருள்முனைவர். **இ.ஸ்டேன்லி ராபின்சன்**
M.A.(Phil)., M.A.(Phil.lic).,M.A.(Chris).,Dip Pas Coun, M.Sc (Psy)., MBA., MPhil., Phd.
பங்குத்தந்தை
புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்
பழனி, திண்டுக்கல் மறைமாவட்டம்




இயேசு கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே, திருவருகைக் காலத்தின் 4ம் ஞாயிறின் திருவழிபாட்டின் மையக் கருத்தாக, கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்ற உண்மையை நம் முன் வைக்கப்பட்டுள்ளது. கடவுள் இறைவாக்கினர் எசாயா வழியாக கொடுத்த வாக்குறுதி அன்னை மரியாள் வழியாக நிறைவேறுகிறது. கடவுள் எப்பொழுதும் நம்முடன் இருக்கின்றார் என்ற பேருண்மை நம் ஒவ்வொருவரின் விசுவாசம். கடவுள் நம்முடன் பல விதத்தில், பல மனிதர்கள் உருவில், பல நல்ல மதிப்பீடுகளின் வழியாக இருக்கின்றவரான இருக்கின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகம் கடவுள் நேர்மையாளர் யோசேப்பு வழியாக எவ்வாறு நம்முடன் இருக்கின்றார். என்பதை எடுத்துக் காட்டுகின்றது. யோசேப்பிடம் இருந்த இரண்டு போற்றுதற்குரிய மதிப்பீடுகளின் வழியாக கடவுள் நம்முடன் இருக்கின்றார். முதலாவதாக நேர்மை என்ற மதிப்பீடு. மத்தேயு நற்செய்தியாளர் யோசேப்பை நேர்மையாளர் என்ற ஏற்றமிது பண்போடு குறிப்படுகின்றார். இக்காலத்தைப் போல காசு கொடுத்து டாக்டர் பட்டம் வாங்குனதுபோல் அல்ல. இது வாழ்க்கையில் வாழ்ந்து பெற்றப் பண்பு இது. நேர்மையாளர்கள் யாரையும் இகழ்ச்சிக்கு உள்ளாக்க மாட்டார்கள் என்பது யோசேப்பின் வழியாக கடவுள் நமக்குக் கற்பிக்கின்றார். உண்மைதான். நேர்மையாளர்கள் யாரும் சக மனிதர்களை இகழ்ச்சிக்கு உள்ளாவதை விரும்புவதில்லை. ஏனென்றால் அவர்கள் கடவுளின் சாயலாகப் படைக்கப் பட்டிருக்கின்றார்கள். சக மனிதர்களை இகழ்ச்சிக்கு உள்ளாக்குவது கடவுளை இகழ்ச்சிக்கு உள்ளாக்குவது என்பதை நன்கு அறிந்தவர்கள். சக மனிதர்களை எந்தவிதத்திலும், நம்முடைய சிந்தனையாலும், செயலாலும், சொல்லாலும் எந்தவித இடையூறுகளுக்கும் உள்ளாக்காமல் இருப்பது நேர்மையாளர்களின் பண்பு. அதுவே கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பதை நினைவுப்படுத்துகின்றது.

நேர்மையாளர் யோசேப்பிடம் இருந்த இரண்டாவது போற்றுதற்குரிய பண்பு, கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவது. ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறு மரியாவை ஏற்றுக்கொள்கின்றார். கடவுளுடைய திட்டம் என்னவென்று அறிந்து, அந்தத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு மீட்பின் திட்டம் நிறைவேற தானும் ஒரு கருவியாக நேர்மையாளர் யோசேப்பு திகழ்கின்றார். ஆக நேர்மையாளர்களின் மாண்புமிக்க பண்புகளில் ஒன்று கடவுளுடைய திட்டத்தை ஏற்று நடப்பது. கடவுளுடைய திட்டம் எப்பொழுதுமே மற்றவர்களை இகழ்ச்சிக்கு உள்ளாக்காது. இவ்விதமாக இம்மானுலோகிய கடவுள் என்று நம்மோடு இருக்கின்றார் என்பதை புனித யோசேப்பின் வழியாக அவருடைய இரண்டு மாண்புமிகு பண்புகளாகிய நேர்மை மற்றும் கடவுளுடைய திட்டத்தின்படி வாழ்வது என்பதன் வழியாக நமக்கு அறிவுறுத்தப்படுகிறது.

நாமும் கடவுளுடைய திட்டத்தை அறிந்து ஏற்றுகொண்டு அதை செயல்படுத்துபவர்களாகவும், அடுத்தவர்களை எந்தவிதத்திலும் இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் நேர்மையாளர்களாக வாழ்ந்து கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பதை நாம் வாழும் சமூகத்திற்கு வாழ்ந்து காட்டுவோம்.

- ஆமென்.




# திருவருகைக் கால நான்காம் ஞாயிறு

எசா. 7:10-14 உரோ. 1:1-7 மத். 1:18-24

**18-12-2022**



**பா. சேவியர்**
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

அமைதி என்னும் மெழுகுதிரி ஏற்றி, திருவருகை காலத்தின் நான்காம் ஞாயிறு திருவழிபாட்டில் பங்கெடுக்க, புனிதமிக்க இறை சந்நதிமுன் நாம் கூடியுள்ளோம். நாம் மனம் திருந்தி வாழ, திருவருகை காலம் நான்காம் ஞாயிறு என்னும் அருள் அடையாளத்தை திருஅவை நமக்கு வழங்கியுள்ளது.

நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப் பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள் என்ற பெருமையை, மகிமையை, உயர்வினை இன்றைய வார்த்தை வழிபாடு முன்மொழிகிறது. இம்மானுவேல் இறைவன் நம்முடன் வாழ்கிறார். இதுவே கிறிஸ்து பிறப்பு விழாவின் மையப்பொருள். இதுவே இன்றைய வழிபாட்டின் கருப்பொருள்.

நாம் நற்செய்திக்கேற்ற வாழ்வு நடத்துகிறோமா? கிறிஸ்து பிறப்பு நமக்கும், நம்மை அடுத்திருப்போருக்கும் நற்செய்தியாய் அமைய தேவையான வற்றை செய்கிறோமா? யோசேப்பைபோல் இறை திட்டத்திற்கு செவிசாய்த்து வாழ்கிறோமா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய திருப்பலி.

நீதிமானும், திருகுடும்பத் தலைவருமான யோசேப்பு, இறை திட்டத்திற்கு செவிசாய்த்ததால், அதனை கடமை உணர்வோடு ஏற்றுக் கொண்டதால், மண்ணில் மனிதராக அவதரித்த ஆண்டவருக்கு இம்மானுவேல் என்ற பெயரினை சூட்டி மகிழும் வாய்ப்பினைப் பெற்றார். பாலன் இயேசுவை தூக்கி வளர்க்கும் பேற்றினை பெற்றார். மரியாளுக்கும், மாமரி மைந்தனுக்கும் நிழல் தரும் ஆலமரமாகத் திகழ்ந்தார்.

மரியாள் வானதூதரின் வார்த்தை யை ஏற்றுக்கொண்டார். சூசையப்பர் வானதூதரின் வார்த்தையை புரிந்து கொண்டார். மரியாளைப்போல், யோசேப்பை போல் இறைவார்த்தை களை நெஞ்சில் ஏற்று, அதை வாழ்வாக்கி வாழ இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

யூதேயா நாட்டை ஆண்டுவந்த, ஆகாசு மன்னனுக்கு கடவுளின் வாக்கு ஓர் அடையாளத்தைக் கொடுத்த செய்தி இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. மனிதரின் உதவியை நாடுவதைவிட, ஆண்டவரின் உதவியை நாடுவதே மேல் என்பதற்கு அடையாளமாகத் தரப்படும் இம்மானுவேல் இறைவாக்கை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நற்செய்தி பணியாளர்களுக்கான இறைவனது அழைப்பு, அவர்களது பணி போன்றவற்றையும், நற்செய்தி என்றால் என்ன என்பது பற்றியும் தூய பவுலடியார் தரும் விளக்கம் இன்றைய இரண்டாம் வாசகமாக அமைந் துள்ளது. திருவருகை காலத்தில் நமது அழைப்பு, கடமைகள், நற்செய்தி பணி பற்றி தியானிக்க உதவும் இவ்வாசகத் தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் தொண்டராக, திருத்தூதராக, நற்செய்தி பணியாளராக உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் இந்த திருவருகை காலத்தில் ஆண்டவருடைய வழிகளை ஆயத்தப்படுத்தி, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை ஆண்டவருடைய வருகைக்கு தயார் செய்ய அவர்களுக்கு தேவையான ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பும் இரக்கமும் நிறைந்த இறைவா, ஏழைகள், எளியவர், வறியவர், அனாதைகள், கைவிடப்பட்டோர் அனைவரும் உமது பரிவிரக்கத்தையும், திருவருளையும் பெற்று வாழவும், கிறிஸ்துவர்களாகிய நாங்கள் அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருந்து உதவிடும் மனப்பக்குவத்தை நாங்கள் பெறவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, எங்கள் குடும்பங்களை நிறைவாக ஆசீர்வதியும். உமது விருப்பப்படியே ஆகட்டும் என்று ஏற்றுக்கொண்ட மரியாளைப் போல் ஒவ்வொரு பெண்ணும் செயல்படவும், யோசேப்பை போல் நீதிமானாக, நிதானமுள்ளவராக, சந்தேகப்படாதவராக ஒவ்வொரு ஆணும் வாழவும், ஒவ்வொரு பிள்ளையும் இயேசுவைப்போல் அறிவிலும், இறைஞானத்திலும் சிறந்து விளங்கவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வழி நடத்தும் தெய்வமே இறைவா, நாட்டு தலைவர்களுக்காக மன்றாடு கிறோம். அவர்கள் தன் வீடு, தன் பிள்ளை, தன் மனைவி என்று சுயநலத்துடன் வாழாமல், என் நாடு, என் மக்கள் என்று பொது நலத்துடன் சிந்திக்கவும், அதன்படி செயல்படவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



**தந்தை தாயரும் சார்ந்தவென்**
**பந்து வும்பரி சனரும்வீண்**
**தொந்த மன்றியோர் துணையிலை**
**எந்தை நீதுணை யென்றுமே**

இயேசுவே! அன்னை, தந்தை, உறவினர்கள், என்னைச் சார்ந்திருப்பவர்கள் என இவர்களால் எனக்கு எந்தப் பலனும் இல்லை. ஆனால், நீவிரே முதன்மையானவர், ஒப்புமைகூற இயலாத அருளே வடிவானவர். உம்மையன்றி யார் எனக்குத் துணையாகும் தகுதி பெற்றவர்? எனக்கு நீரே நல்ல துணையாவீர்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் -24

**உரானென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

### குறள் விளக்கம்

அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்

### சிந்தனை

பக்கத்து நாட்டுக்கு பாதயாத்திரை மேற்கொண்டான் அந்த அரசன். பாதைகள் மோசமாக இருந்ததைப் பார்த்து பதைத்தான். ஊர்திரும்பியதுமே உத்தரவிட்டான். என் நாட்டின் சாலைகளில் தேர்கள் வழுக்கிக் கொண்டு போக வேண்டும். மாட்டுத் தோலால் எல்லா சாலைகளையும் போடுங்கள் என்றான். பல்லாயிரக் கணக்கான மாடுகளை பலிகொண்டா சாலைகள் போடுவது பதைத்தார்கள் மக்கள். அரசனின் ஆன்மீக குரு கையில் ஒரு பொட்டலத்தோடு அரசனை காணச் சென்றார். அவரது கைகளாலேயே செய்யப்பட்ட காலணிகள் அதில் இருந்தன. இவற்றில் உன் பாதங்களை நுழைத்துக் கொள். மாடுகள் பிழைத்துக் கொள்ளட்டும் என்றார். அரசன் வெட்கப்பட்டான். அறிவற்ற மூடனின் செயலை தலைவன் என்பதற்காக கண்மூடித்தனமாக பின்பற்றலாகாது. சரியானதை மட்டும் செய்யவும் தவறானதை சுட்டிக்காட்டிடவும் வேண்டும். ஏனெனில் அறிவுடையோர் பெரியோர் அவரது சொல் மதிப்பிற்குரியது.

ஆண்டவருக்கு அஞ்சுங்கள்: அதுவே ஞானம், தீமையை விட்டு விலகுங்கள்: அதுவே அறிவு யோபு 28:28. தவறிழைக்கும் மனிதனை பார்த்து, உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? இப்படி அறிவில்லாமல் செய்துவிட்டாயே? என்கிறோம். அறிவின் ஊற்றாகிய இறைவனை பின்பற்றினால் அவர் நெறி நடந்தால் தவறிழைக்க வழியில்லை.

அறிவு ஐம்புலன்களையும் அடக்கும் சக்தி படைத்தது. பார்வையை, சிந்தனையை, சொற்களை, செயல்களை நெறிப்படுத்தி மனிதனை மகானாக்கும் வல்லமை படைத்தது அறிவு. பிள்ளாய்! என் ஞானத்தில் உன் கவனத்தை செலுத்து. என் அறிவுரைக்கு செவி கொடு. அப்பொழுது விவேகத்துடன் நடந்து கொள்வாய்: அறிவு உன் நாவை காவல் செய்யும் நீமொ 5:1,2.

நுண்ணறிவை அளவிடவும் வழிமுறைகள் உண்டு. தனக்கு தெரிந்தது இவ்வளவு தெரியாது எவ்வளவு என்பதைக் கொண்டே அளவிடுகிறோம். அதிகம் தெரிந்தவரை அறிவாளி எனவும், குறைவாக அறிந்தவரை அறிவற்றவர் எனவும் அழைக்கிறோம். தனக்கு தெரிந்ததை தெரியும் என்றும், தெரியாததை தெரியாது என்றும் அறிவது தான் அறிவு என்கிறார் கன்பூசியஸ். அறிவு வளம் பெற உழைப்போம்: நன்னெறியில் நாளும் வளர்வோம்.



சகோதரி. ரோசி. காங்கேயம்,
புனித காணிக்கை அன்னை சபை.

# சமூகமும்... சட்டமும்...

சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு ஒரு அடிப்படை மனித உரிமையாகும். ஆயினும்கூட, உலகம் முழுவதும், அரசியல் முதல் பொழுதுபோக்கு வரை, பள்ளி முதல் பணியிடங்கள் வரை, பெண்கள் மற்றும் குழந்தைகள் பலவிதமான வன்முறைக்கு ஆளாகின்றனர்.

இன்றைய சமூகம் ஆணாதிக்க நெறிமுறைகள் மற்றும் மரபுகளில் வேரூன்றியதால், பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களின் மாண்பு மற்றும் மதிப்பு குறைந்தவர்களாக நடத்தப்படுவதும் அவர்களின் மீது வன்முறையை தொடுப்புதும் சமூகத்தின் தனிப்பட்ட, பொருளாதார மற்றும் எதிர்கால நல்வாழ்வின் மீது தீங்கான, எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் இது ஓர் ஆரோக்கியமான சமூகமாக இருக்க முடியாது. எனவே அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை கட்டியெழுப்புவது என்பது யாரையும் விட்டு வைக்காதது. இன்று நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களுக்கு தீர்வு காண்பதில் பெண்களும் குழந்தைகளும்; முக்கியமானவர்கள், மேலும் அவர்களின் எதிர்காலம் மற்றும் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான அவர்களின் முன்னோக்குகள் மற்றும் தேர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் சமூகம் முழுவதும் கேட்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் மற்றும் கொண்டாடப்பட வேண்டும்.

பெண்களும் தங்கள் உரிமைகளை உணரவேண்டும். சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தும் பகிரப்படவேண்டும். எனவே சமத்துவ சமூகத்தை உருவாக்க ஆண் பெண் இருவருமே கைகோர்த்து உழைக்க வேண்டியுள்ளது. எனவே பெண்கள் மற்றும் அடித்தட்டு மக்களுக்கான சட்டங்களை பகிர்வதில் மகிழ்கின்றேன் கடந்த 23 ஆண்டுகளாக பெண்கள் குழந்தைகளின் உரிமைக்காக மற்றும் ஈழ தமிழ் சொந்தங்கள் மத்தியில் பணி செய்ததன் அடிப்படையில் தொடர்ந்து சில சமூக மாற்று சிந்தனைகளையும் பகிர அருட்பணி சைமன் பீட்டர் அவர்கள் அறிமுகப்படுத்தி உற்சாகப்படுத்தியதால் என்னுடைய பதிவுகளை தொடர்கின்றேன். எனது பெயர் அருட்சகோ. ரோசி, புனித காணிக்கை அன்னை சபையை சார்ந்தவர். சிநேகா சமூகப்பணி மையத்தின் பொறுப்பளராக பணி செய்து வருகின்றேன்.



# திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு

## 18.12.2022 முதல் 25.12.2022

**18.12.2022 – ஞாயிற்றுக்கிழமை**

திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு

முதல் வாசகம் : எசாயா 7:10–14

இரண்டாம் வாசகம் : உரோமையர் 1:1–7

நற்செய்தி : மத்தேயு 1:18–24

**19.12.2022 – திங்கட்கிழமை**

முதல் வாசகம் : நீதித்தலைவர்கள் 13:2–7, 24–25அ

நற்செய்தி : லூக்கா 1:5–25

**20.12.2022 – செவ்வாய்கிழமை**

முதல் வாசகம் : எசாயா 7:10–14

நற்செய்தி : லூக்கா 1:26–38

**21.12.2022 – புதன்கிழமை**

முதல் வாசகம் : இனிமைமிகு பாடல் 2:8–14

நற்செய்தி : லூக்கா 1:39–45

**22.12.2022 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : 1சாமுவேல் 1:24–28

இரண்டாம் வாசகம் : லூக்கா 1:46–56

**23.12.2022 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : மலாக்கி 3:1–4. 23–24

நற்செய்தி : லூக்கா 1:57–66

**24.12.2022 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : 2சாமு. 7:1–5, 8ஆ–12, 14அ, 16

நற்செய்தி : லூக்கா 1:67–79

**25.12.2022 – ஞாயிறு – கிறிஸ்து பிறப்புப் பெருவிழா**

**இரவுத் திருப்பலி**

முதல் வாசகம் : எசாயா 72:1–5

இரண்டாம் வாசகம் : திருத்தூதர் பணிகள் 13:16–17, 22–25

நற்செய்தி : மத்தேயு 1:1–25 அல்லது மத்தேயு 1:18–25

**அதிகாலைத் திருப்பலி**

முதல் வாசகம் : எசாயா 62:11–12

இரண்டாம் வாசகம் : தீத்து 3:4–7

நற்செய்தி : லூக்கா 2:15–20

**பகல் திருப்பலி**

முதல் வாசகம் : எசாயா 52:7–10

இரண்டாம் வாசகம் : எபிரேயர் 1:1–6

நற்செய்தி : யோவான் 1:1–18



Jesus Christ, Lord of all things! You see my heart, you know my desires. Possess all that I am- you alone. I am your sheep; make me worthy to overcome the devil.

- St. Agatha of Sicily -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

நலக்கல்வி அறிவோம்.
நலம்பேணும் உறவுகளுக்கு வணக்கம்.

வணக்கம் நலம் காக்கும் நல் உள்ளங்களே..!

## பப்பாளியின் மருத்துவ குணங்கள்

பாப்பாளி தற்போது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழம். மலிவானது. இனிப்பானது. எல்லோரும் அறிந்தது. சத்துக்கள் மிகுந்தது. மஞ்சள், சிவப்பு நிற பழங்களாகவும், சில சமயம் பச்சை கலந்த நிறத்திலும் உள்ளது.

இதிலும் வைட்டமின் ஏ உயிர் சத்து நிறைய இருக்கிறது. பல் சம்மந்தமான குறைபாட்டிற்கும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும், பப்பாளி சாப்பிட்டால் போதும்.

நரம்புகள் பலப்படவும், ஆண்மை தன்மை பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை உண்டு பண்ணவும் பப்பாளி சாப்பிடுங்கள்.

அடிக்கடி பப்பாளி பழத்தினை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும்இ அது இவர்களை தாக்காது. பப்பாளி பழத்தில் இயற்கையாகவே விஷக்கிருமிகளை கொல்லும். பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும்.எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.

பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும். தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும். பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும். நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து, தேன் கலந்து முகத்தில் பூசி ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.

பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும். பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும். பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.

பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும். பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடையும். பப்பாளி விதைகளை அரைத்து, தேள் கொட்டிய இடத்தில் பூச வலி விஷம் இறங்கும்.

பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும். 100 கிராம் பச்சைக் காயான பப்பாளியில் 32 மில்லி கிராமும் நன்றாகப் பழுத்ததில் 68 முதல் 136 மில்லி கிராமும் வைட்டமின் சி இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

பழுக்காத பச்சைப் பப்பாளித் துண்டுகள் அல்லது சாறை அருந்தினால் குடலிலுள்ள வட்டப்புழுக்கள் வெளியேறும். கல்லீரல் கோளாறுகளுக்கும் பப்பாளி மருத்துவ ரீதியாக உதவி சரிசெய்யும். முறையான மாதவிலக்கு ஒழுங்குக்கு பப்பாளி உண்பது சரியான வழி.

அடிவயிற்றுப் பிரச்னைகளுக்கு பப்பாளியே மிகச் சிறந்த மருந்து. வயிற்றுக் கடுப்பு செரிமானமின்மை அமிலத்தொல்லை மலச்சிக்கல் இவற்றுக்கெல்லாம் அருமருந்து பப்பாளி.

முகப்பரு உள்ளவர்கள் பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக

முகத்தில் தேய்க்க வேண்டும். இது முகப்பருக்களைப் போக்கி முகச் சுருக்கங்களையும் நீக்கி பொலிவு கூட்டும்.

பப்பாளியின் இலையில் ஆன்டி-மலேரியல் மற்றும் ஆன்டி-கேன்சர் பொருட்கள் உள்ளதால் இதன் சாற்றை மலேரியா மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிட்டு வந்தால் உடலில் இருக்கும் அந்த நோய் பாதிப்பை குறைக்கலாம்.

தினமும் நாம் பப்பாளி இலைச் சாற்றினை சிறிய அளவில் குடித்து வந்தால் அது நமது உடம்பின் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கச் செய்து உடல் சோர்வு போன்ற பிரச்சனைகளை தடுக்கும். வயிற்றில் ஏற்படும் செரிமான பிரச்சனை, ஒவ்வாமை, அலர்ஜி போன்ற சரும பிரச்சனை, ஒழுங்கற்ற மாத விடாய் சுழற்சி, நீரிழிவு மற்றும் பக்கவாதம் போன்ற பல பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வாக உள்ளது.

பப்பாளி இலையை நன்றாக அரைத்து தேங்காய் எண்ணெயில் சேர்த்து தைலம் போல் காய்ச்சி வடிகட்டி அந்த எண்ணையை தினமும் தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் பொடுகு தொல்லை நீங்கும்.

படர் தாமரை என்று உடல் இடுக்குகளில் ஏற்படும் தோல் பிரச்னைக்கும் பப்பாளி இலையை அரைத்து பூசினால் நல்ல குணம் கிடைக்கும். பப்பாளி விதை உட்கொள்வதால் கல்லீரல் குடல் புழுக்கள் மற்றும் டெங்கு போன்ற நோய்களிலிருந்து குணம் பெறலாம்.

நலம் நாடும் நல்உள்ளங்கள் தொடர்ந்து பப்பாளியை பயன் படுத்தி வாழ்வில் நலமும் வளமும் பெருக.

நன்றி...
என்றும் உங்கள் சகோதரன் **அம்புரோஸ்**
தொடர்பு எண் : **9360456063**

